திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் தலைமையில்நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் நினைவஞ்சலி ஊர்வலம் சாஸ்திரி சாலையில் உள்ள கோஹினூர் தியேட்டர் அருகில புறப்பட்டு அண்ணா நகர் உழவர் சந்தை அருகே இருக்கும் தியாகிகளின் நினைவு சின்னம் வரை சென்றது ஊர்வலத்தில் தலைமை தாங்கி பங்கேற்ற அமைச்சர் கே.என்.நேரு, முன்னிலை வகித்த அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தியாகிகளின் நினைவிடத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்கள் அருகில் எம்பி அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் தியாகராஜன், ஸ்டாலின் குமார், சௌந்தரபாண்டியன், பழனியாண்டி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அன்பில் பெரியசாமி கே என் சேகரன், கிழக்கு மாநகர செயலாளர் மதிவாணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

மாநில அரசையும் மத்திய அரசையும் இணைக்கும் பாலம்தான் ஆளுநர் பதவி;

இருவரையும் பிரிக்கும் சுவராக செயல்படுவது தவறு!

‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜன. 27–

ஆளுநர் என்பவர் மாநில அரசையும் மத்திய அரசையும் இணைக்கும் பாலமாக செயல்பட வேண்டுமே தவிர இருவரையும் பிரிக்கும் சுவராக இருக்கக் கூடாது என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

மத்தியில் ஜனாதிபதியும், மாநிலங்களில் கவர்னர்களும் இருக்கவேண்டும் என்று இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. கவர்னர்களுக்கு என்று தனியாக நிர்வாக அதிகாரங்கள் இல்லையென்றாலும் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் கடமை இருக்கிறது. இதுதவிர பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பிலும் கவர்னர் இருப்பார். அரசியலமைப்பு சட்டத்தின் 176வது பிரிவில், ஒவ்வொரு ஆண்டும் முதல் தடவை நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் கடமை இருக்கிறது. இதுதவிர பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பிலும் கவர்னர் இருப்பார். அரசியலமைப்பு சட்டத்தின் 176வது பிரிவில், ஒவ்வொரு ஆண்டும் முதல் தடவை சட்டசபை கூடும்போது முதல் நாள் மாநில அரசு தயாரித்துக் கொடுக்கும் உரையை கவர்னர் வாசிப்பதோடு தொடங்கும் என்று தெள்ளத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் அந்த ஆண்டுக்கான அரசின் கொள்கைகளை விளக்குவதுதான்.

தலையங்கம்

தினத்தந்தி

26.1.2026 (திங்கட்கிழமை)

பாலமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர சுவராக அல்ல

ஆனால் சமீபகாலங்களாக பா. ஜனதா அல்லாத எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அரசு தயாரிக்கும் உரையை கவர்னர்கள் வாசிக்காமல், சில பகுதிகளை விட்டு வாசிப்பது, தாங்களாகவே சில பகுதிகளை இணைப்பது, உரையை புறக்கணிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதால் சர்ச்சைகள் வெடித்து கிளம்பியுள்ளன. இது தமிழக கவர்னராக ஆர்.என்.ரவி பதவியேற்றதில் இருந்து தொடங்கியது. பொதுவாக சட்டசபையில் இருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் வெளிநடப்பு செய்வார்கள். ஆனால் கவர்னர் உரையை முழுமையாக வாசிக்காமல் 4வது ஆண்டாக ஆர்.என்.ரவி வெளிநடப்பு செய்துள்ளார். 2023ல் அவர் தனது உரையில் சில சொற்களை வாசிக்காததால் எழுந்த சர்ச்சையிலும், 2024 ம் ஆண்டு தேசிய கீதம் முதலில் இசைக்கப்படவில்லை என்றும், கடந்த ஆண்டும் அதே காரணத்தை கூறியும் வெளிநடப்பு செய்தார். இந்த ஆண்டு ஆர்.என்.ரவி பேச தொடங்கி சில கருத்துகளை முன்வைத்தபோது அவருக்கும், சபாநாயகர் அப்பாவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து கவர்னர் சட்டசபையில் இருந்து நடையை கட்டினார். அடுத்த சில நிமிடங்களில் மக்கள் பவனில் இருந்து கவர்னர் தன் உரையை வாசிக்காமல் புறக்கணித்தது ஏன்? என்பதை விளக்கும் 13 காரணங்கள் கொண்ட அறிக்கை வெளியிடப்பட்டது. இதே போல கேரளாவில் கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் தனது உரையில் மத்திய அரசை விமர்சிக்கும் பகுதியை வாசிக்காமல் தவிர்த்துள்ளார். கர்நாடக சட்டசபையிலும் கவர்னர் தாவர்சந்த் கெலாட் தனது உரையை புறக்கணித்து வெளிநடப்பு செய்திருக்கிறார். கவர்னருக்கும், மாநில அரசுக்கும் ஏற்பட்ட மோதலால் தெலுங்கானாவிலும், மேற்கு வங்காளத்திலும் கவர்னர் உரை இல்லாமலேயே முன்பு கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலும் கவர்னர் உரையுடன் கூட்டம் தொடங்கும் என்ற நடைமுறையை நீக்கும் வகையில் சட்டத்தை திருத்தும் முயற்சியை மேற்கொள்வோம் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த கருத்தை 35 ஆண்டுகளுக்கு முன்பே, அப்போது ஜனாதிபதியாக இருந்த ஆர்.வெங்கட்ராமனும் முன்வைத்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரை, சட்டசபையில் கவர்னர் உரை என்பதெல்லாம் தேவையற்றது. இதெல்லாம் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தில் உள்ள நடைமுறைகள். அந்த அர்த்தமற்ற நடைமுறைகள் இங்கிலாந்து நாட்டின் ‘ஹவுஸ் ஆப் காமன்ஸ் என்ற மக்களவை நடைமுறையில் இருந்து நமது அரசியல் சட்டத்துக்கு இரவலாக பெறப்பட்டது. எனவே தகுந்த சட்டத்திருத்தம் மூலம் இந்த நடைமுறைகளை நீக்கவேண்டும் என்று பிரதமர்களாக இருந்த ராஜீவ் காந்தியிடமும், சந்திரசேகரிடமும் பரிந்துரை த்தார். இதேபோல ஆட்டுக்கு தாடியும் நாட்டுக்கு கவர்னரும் தேவையில்லை என்று அறிஞர் அண்ணா கூறினார். பொதுவாக கவர்னர்கள் மத்திய அரசின் பிரதிநிதியாகவே இருக்க வேண்டும். அவர்கள் ஆளுங்கட்சியின் பிரதிநிதியல்ல. மொத்தத்தில் மாநில அரசையும், மத்திய அரசையும் இணைக்கும் பாலமாகத்தான் கவர்னர் செயல்படவேண்டுமே தவிர, இருவரையும் பிரிக்கும் சுவராக செயல்படக்கூடாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

தொடரட்டும் ஸ்டாலின்!

இன்று சட்டப்பேரவையில் தனது ஐந்தாண்டு ஆட்சிக்கால நிறைவைப் பற்றிய சுய மதிப்பீட்டினை பதிவு செய்தார் முதல்வர் ஸ்டாலின்.

என்னுடைய மதிப்பீட்டில் இந்த அளவு செயல்முனைப்புடன் (executive intent) விளங்கிய ஆட்சியை நான் இதுவரை கண்டதில்லை. ஐந்தாண்டுகளாக இடைவிடாமல் செய்திகளை பின் தொடர்ந்து வருகிறேன்.

பல்வேறு துறைகளிலும் புதிய திட்டங்கள், சிந்தனைகள் என அனைவரையும் தொடர்ந்து புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடத் தூண்டியுள்ளார். பூங்கா, நூலகம், மருத்துவமனை, பேருந்து நிலையம் என புதுப்பொலிவு பெற்றவையின் பட்டியல் மிக நீண்டது.

முதலீடுகளை ஈர்ப்பது, பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவில் முன்னணி வகிப்பது என்பவை அடிப்படையான சாதனைகள். அதற்கு மேல், பல்வேறு அம்சங்களில் ஆட்சியின் முனைப்பு வெளிப்படுவதுதான் முக்கியம்.

மக்கள் நலத் திட்டங்களிலும், பொதுவான காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை போன்றவை தவிர நான் முதல்வன், புதுமைப்பெண் என்றெல்லாம் மிக முக்கியமான புதிய முயற்சிகளை எடுத்துள்ளார்கள். பள்ளிக் கல்வியில் பல மதிப்புக்கூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதையெல்லாம் எடுத்துச் சொல்வதை சார்புத்தன்மை, ஆதரவு என்று மட்டும் புரிந்துகொள்வது அவலமான மனோநிலை. குறை சொல்வது மட்டுமே நடுநிலை, பாராட்டுவது சார்புத்தன்மை என்று நினைப்பது விமர்சன சிந்தனைக்கு முற்றிலும் எதிரானது.

உதாரணமாக இன்றைய தொலைகாட்சி விவாதங்களில் இதுதான் பேசுபொருளாக இருந்திருக்க வேண்டும். சன் நியூஸ் கேள்விக்களத்தில் சிறிதளவு பேசினார்களே தவிர, பிற விவாதங்களில் முதல்வரின் உரை கவனம் பெறவேயில்லை. சன் நியூஸில் ராஜீவ் காந்தி பங்கேற்றதைத் தவிர பிற சேனல்களில் தி.மு.க செய்தித் தொடர்பாளர்கள் யாரும் பங்கேற்கவில்லை.

பாராட்ட வேண்டியதை பாராட்டுவது என்பதும் மக்களாட்சியில் மிக மிக முக்கியம். இல்லாவிட்டால் இதையெல்லாம் செய்யாமலேயே அரசியல் பண்ணலாம் என்ற எண்ணமே மேலோங்கும்.

ஸ்டாலின் தொடரட்டும், தமிழ் நாடு வெல்லட்டும்!

ராஜன் குறை கிருஷ்ணன்
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.

திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆலோசனையின்படி உடுமலை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஈ.கே.மாரிமுத்து ஏற்பாட்டில் அ.தி.மு.க., பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒன்றிய, கிளை நிர்வாகிகள் 170 க்கும் மேற்பட்டோர் கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி சிவா மண்டல பொறுப்பாளர், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட ஒன்றிய கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

11 முறை தேர்தலில் தோல்வியடைந்த

எடப்பாடி பழனிச்சாமிக்கு 12வது தோல்வியை 2026 நிச்சயமாக தரும்!

புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை. ஜன.27–

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இது நம்ம ஆட்டம் 2026 முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழாவை மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். இதில் புதுக்கோட்டை எம்.எல்.ஏ. முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

தேசிய ஜனநாயக கூட்டணி என்பது அதிமுகவின் ஒரு பகுதியும் அதேபோல பாஜகவும் இணைந்ததை தவிர அதை நாங்கள் வலுவாக பார்க்கவில்லை, அது பலவீனமான கூட்டணி, எத்தனை கட்சிகள் அந்த கூட்டணியில் வந்து சேர்ந்தாலும் திமுகவின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி இந்தியா கூட்டணியை யாராலும் எதுவும் செய்ய முடியாது. தமிழ்நாட்டு மக்களின் மனதில் யார் இருக்கிறார்களோ அவர்கள் தான் வெல்ல முடியுமே தவிர கூட்டத்தைக் கூட்டி காட்டி யாராலும் வெல்ல முடியாது.

தமிழ்நாட்டின் மக்களின் மனநிலையை இன்றைக்கு ஒவ்வொரு சர்வே மூலமாக நாங்கள் அறிந்து வருகிறோம். மீண்டும் திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும். அதன் மூலமாக தங்களுக்கு இன்னும் பல நன்மைகள் கிடைக்க வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு மக்களுடைய விருப்பம். இந்த ஐந்தாண்டு காலம் நாங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்களுக்கான திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி இருக்கின்ற அரசு தான் திராவிட மாடல் அரசு. இந்த அரசு தொடர வேண்டும் என்பது தான் தமிழ்நாடு மக்களின் விருப்பம். அந்த விருப்பத்தை மோடியாலோ வேறு யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

கிரைம் மாஃபியா கரப்ஷன் எல்லாம் பிரதமர் மோடியின் கட்சிக்கும் அவர்களது கூட்டணிக்கும் தான் பொருந்துமே தவிர எங்களுக்கு ஒரு துளியும் பொருந்தாது.

11 முறை தேர்தலில் தோல்வியடைந்த எடப்பாடி பழனிச்சாமிக்கு 12வது தோல்வியை 2026 நிச்சயமாக தரும்.

தேர்தலுக்காக பிரதமர் ஆயிரம் பேசினாலும் தேர்தலில் எதிரொலிக்காது தமிழ்நாட்டு மக்கள் கெட்டிக்காரர்கள் அவர்களுக்கு எது நல்லது எது கெட்டது என்பது தெரியும். தங்களுக்கு எந்த ஆட்சி உதவி செய்யும் என்பது தமிழ்நாடு மக்களுக்கு தெரியும் மோடி ஆயிரம் குற்றச்சாட்டுகளை சொல்லலாம் குறைகளை சொல்லலாம் ஆனால் அவர் தனக்கு முன்னால் இருக்கக்கூடிய மாநிலங்களை எல்லாம் பார்த்து விட்டு பாஜக ஆளுகின்ற மாநிலங்களையெல்லாம் பார்த்துவிட்டு அதைவிட தமிழ்நாட்டில் ஏதாவது குற்றங்கள் கூட என்று சொன்னால் அப்போது நாங்கள் பதில் அளிக்கிறோம்.

யார் வந்தாலும் வந்தவர்களை வரவேற்கின்ற இயக்கம் தான் திமுக. அவர்களுக்கு உரிய மரியாதை தருகிற தலைவர் தான் மு.க.ஸ்டாலின். எங்களை நம்பி வருகின்றவர்கள் கெட்டுப் போன வர்கள் கிடையாது. மற்றவர்களை நம்பி செல்பவர்கள் மோசம் போவதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

எடப்பாடி பழனிச்சாமியை டி.டி.வி. தினகரன் விமர்சனம் செய்து பேசிவிட்டு மீண்டும் கூட்டணி சேர்ந்துள்ளது வெட்கக்கேடு.

தேசிய ஜனநாயக கூட்டணி காட்டும் ஒட்டு மொத்த கூட்டத்தையும் நாங்கள் மகளிர் அணி கூட்டத்தின் மூலமாகவே பீட் செய்து விடுவோம். பகுதி பகுதியாக மக்கள் அலையை கொண்டு செல்கின்ற சக்தி இந்தியாவிலேயே தி.மு.க.வுக்கு இருப்பதைப் போல வேறு எந்த இயக்கத்துக்கும் கிடையாது.

நாங்கள் எப்போதும் எதிரிகள் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இறுமாப்பு கொண்டவர்கள் கிடையாது. எதிரிகள் இருக்கிறார்கள் ஆனால் எங்களோடு மோதும் அளவிற்கு அவர்கள் வலிமையாக இல்லை.

தேர்தல் என்று வந்து விட்டால் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். மக்களிடத்தில் நாங்கள் சென்று எங்கள் கருத்துக்களை சொல்கின்ற பொழுது மக்கள் யார் கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். நாங்கள் சொன்னதை செய்துள்ளோம் மகளிர் உரிமைத்தொகை தருகிறோம் என்று கூறினோம் அதை தந்துள்ளோம். நாங்கள் ஒரு கோடியே 32 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத்தொகை தந்திருக்கிறோம்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 60 லட்சம் குடும்பங்களுக்கு 2000 ரூபாய் தருகிறோம் என்று கூறி ஏமாற்றிய எடப்பாடி பழனிச்சாமியை மக்கள் நம்புவார்களா, அல்லது ஒரு கோடியே 32 லட்சம் குடும்பங்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகையைக் கொடுக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை நம்புவார்களா என்பதை எண்ணி பார்க்க வேண்டும்.

கவுண்டவுன்ஸ் ஸ்டார்ட் ஆகி விட்டது தான் அது எங்கள் வெற்றிக்கான கவுண்டவுன் ஸ்டார்ட் ஆகி விட்டது என்று தெரிவித்தார்.

கடலூர் மாவட்ட மீனவ கிராமங்களின் உள்கட்டமைப்பிற்கு

பல கோடி ரூபாய்க்கு திட்டங்கள் தந்த ‘திராவிட மாடல்’ அரசு!

கழக மீனவர் அணி செயலாளர், மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் பேச்சு!

கடலூர். ஜன. 27–

கடலூர் மாவட்டம், முடசலோடை, பரங்கிபேட்டை, புதுக்குப்பம், கடலூர் ஆகிய நான்கு பகுதிகளில் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாம்கள் நடைபெற்றது. இந்த முகாம்களின் வழியே 1030 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இந்த முகாம்களில் கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் பேசுகையில், "கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களின், பொற்கால திராவிட மாடல் நல்லாட்சியில் கடலூர் மாவட்ட மீனவர்களுக்கு ஏராளமான திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீன்பிடித்தொழில் சார்ந்த ஒருவர் கூட விடுபட்டுவிடக்கூடாது என அறிவுறுத்தி உள்ளார். அதனால் தான் தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்களை நடத்தி உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்தி யுள்ளோம்.

கழக ஆட்சியில், முதல்வர் அவர்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 5000 ரூபாயில் இருந்து 8000 ரூபாயாக உயர்த்தினார்கள். அதில் கடலூர் மாவட்டத்தில் மட்டும் 60222 பயனாளிகளுக்கு, 3718.29 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் கடந்த 5 ஆண்டுகால கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் 63043 பயனாளிகளுக்கு, மீன்பிடி குறைவுகால நிவாரணத் தொகையாக 3782.59 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் கழக ஆட்சியில் கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 73348 பயனாளிகளுக்கு, 3296.71 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் 71170 பயனாளிகளுக்கு, 3200.59 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கழகத் தலைவரின் ஆட்சியில், கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் தின உதவித் தொகையானது 250 ரூபாயில் இருந்து, 350 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மீனவர்களின் நலன் நாடும் அரசாக நம் திராவிட மாடல் அரசு உள்ளது. அந்த வகையில் கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் படகுகளுக்கு வழங்கப்படும் மானிய விலை எரியெண்ணையின் அளவினை விசைப்படகுகளுக்கு 18 ஆயிரம் லிட்டரில் இருந்து, 19 ஆயிரம் லிட்டராகவும், நாட்டுப் படகிற்கு ஆண்டு ஒன்றிற்கு 4000 லிட்டரில் இருந்து, 4400 லிட்டராகவும் உயர்த்தி வழங்கினார். இதில் கடலூர் மாவட்டத்தில் 190 விசைப்படகுகளும், 894 நாட்டுப்படகு மீனவர்களும் பயன்பெற்று வருகின்றனர்.

கடலூர் மாவட்ட மீனவ கிராமங்களிலும் ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள தாழங்குடா மீன்பிடி துறைமுகத்தில் 13 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைத்தது கழக அரசு. முதுநகர் மீன்பிடித்துறைமுகத்தை புதுப்பிக்கும் பணிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சி.புதுப்பேட்டை மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பரங்கிப்பேட்டை அன்னன் கோவில் மற்றும் முடசலோடை மீனவ கிராம மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகள் அமைக்கும் பணி 19 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல், சுனாமிநகர், அக்கரைகோரி மீனவ கிராமங்களில்

இந்நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள், பாரம்பர்ய மீனவர் சங்கத் தலைவர் எஸ்.ஏ.மகேஷ் உள்ளிட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், மீன்வளத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

திருச்சி மத்திய – வடக்கு மாவட்டத்திற்கு

தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் வருகை!

திருச்சி மத்திய – வடக்கு மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி – ந.தியாகராஜன் அறிக்கை!

திருச்சி, ஜன. 27 –

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்துக் கேட்புக் கூட்டம் தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் திருமதி. கனிமொழி எம்.பி. அவர்கள் தலைமையிலும், கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு முன்னிலையிலும் இன்று (27.01.2026 – செவ்வாய்கிழமை) மாலை: மணியளவில் ஜமால் முஹமது கல்லூரி கலையரங்கத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் திருச்சி மத்திய,வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைசெய்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள்,பொது மக்கள்,சிறு குறு தொழில் முனைவோர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதி கள்,பெண்கள் நல அமைப்பு நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், சமூக நல ஆர்வலர்கள், நகர் நல சங்கத்தின் நிர்வாகிகள், மாற்றுதிறனாளிகளின் அமைப்பு நிர்வாகிகள் அனைவரும் வருகை தந்து தங்களது கோரிக்கைகளை மனுவாவோ, நேரிடையாக செய்து தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் தேரில் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தருமபுரி மேற்கு மாவட்டம் கிருஷ்ணாபுரம் கலைஞர் திடலில் தருமபுரி மேற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது.இதில் மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வழக்கறிஞர்.ஆடுதுறை மு.உத்ராபதி,தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன்,மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் கழக இளம் பேச்சாளர் கொ.ரமேஷ் ஆகியோர் வீரவணக்க நாள் சிறப்புரை ஆற்றினர்.உடன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மா.சந்தர், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் இரா.முனுசாமி,ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.பிரபுராஜசேகர்,சக்திவேல், மாது,மாணவரணி துணை அமைப்பாளர்கள் சதாசுர்ஜித், பிரபு,புனிதா மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமான மாணவர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.